மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

57—

நியாய விலைக் கடை

***8560—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, 75–வது வார்டு, எஸ்.எஸ். புரம் 'பி' பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, 75–வது வட்டத்தில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் எஸ்.எஸ். புரம் 'பி' பிளாக் பகுதியிலுள்ள 875 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 976 குடும்ப அட்டைகளுடன் பார்த்தசாரதி தெருவில் வள்ளுவன் தெரு, எண் 5 என்ற எண்ணுள்ள முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 10–10

நகர்ப்புறப் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் முதல் அதிகபட்சமாக 1,000 குடும்ப அட்டைகள் வரை இருக்கலாம். ஆனால், வள்ளுவன் தெரு, எண் 5 என்ற முழுநேர நியாய விலைக் கடையில் 976 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இடைவெளியும் ஒரு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதால், எஸ்.எஸ். புரம் 'பி' பிளாக் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.வி.க. நகர் தொகுதி, 75—வது வார்டு, எஸ்.எஸ். புரம் என்றழைக்கப்படுகின்ற சிவசண்முகபுரம் பகுதி என்பது ஒரு பிரதான சாலையையும், எட்டு நீண்ட தெருக்களையும், 3,596 வாக்காளர்களையும் கொண்ட மிகப் பெரிய பகுதியாகும். அப்பகுதியிலே நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாகும். காரணம், அந்தப் பகுதிக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற நியாய விலைக் கடைக்கு அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் செல்ல வேண்டுமென்றால் நீண்டதூரம் பயணிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி நீண்ட தூரம் பயணிப்பதற்கு போக்குவரத்து வசதியும் அங்கே இல்லை. மேலும், அந்த நியாய விலைக் கடைக்குச் சென்று பொருட்களை வாங்குபவர்கள் வீட்டிலுள்ள பெண்கள் என்பதால் நீண்டதூரம் பயணிக்க முடியாத சூழ்நிலையில் ஆட்டோவை நாடுவதற்கு அவர்களுடைய மனம் செல்கிறது. அப்படி ஆட்டோவில் கடைக்குச் செல்வதற்கு 40 ரூபாயும், மீண்டும் வீட்டிற்கு வருவதற்கு 40 ரூபாயும் என மொத்தமாக 80 ரூபாய் செலவாகிறது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் வசதி படைத்தவர்கள் கிடையாது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பதால், ஒவ்வொரு முறையும் ஆட்டோவிற்கு 80 ரூபாய் செலவு செய்து சென்று வருவது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, அவர்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியிலே நியாய விலைக் கடையை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையில் சொல்கின்றபோது டி.பி. 052 குறியீடைக் கொண்ட பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் 5 முழுநேர நியாய விலைக் கடைகள் இயங்கி வருவதாகத் தெரிவித்தார். அது உண்மையல்ல. அந்த 5 நியாய விலைக் கடைகளும் திசைக்கு ஒன்றாக இயங்கி வருகின்றன. குறிப்பாக, ஒரு நியாய விலைக் கடை எஸ்.எஸ். புரம் 'ஏ'

பிளாக் பகுதியிலும், இரண்டாவது நியாய விலைக் கடை திரு.வி.க. தெருவிலும், மூன்றாவது நியாய விலைக் கடை ஸ்ரீ பவானி எல்லையம்மன் தெருவிலும், நான்காவது மற்றும் ஐந்தாவது நியாய விலைக் கடைகள் எழும்பூர் தொகுதி, பார்த்தசாரதி தெருவிலும் செயல்பட்டு வருகின்றன. நான் குறிப்பாகக் கேட்கின்ற நியாய விலைக் கடை என்பது திரு.வி.க. நகர் தொகுதியிலுள்ளது. மக்கள் நீண்டதூரம் பயணம் செய்து எழும்பூர் தொகுதி, பார்த்தசாரதி தெருவில் அமைந்திருக்கும் கடைக்குச் செல்ல வேண்டிய சிரமமான சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் நியாய விலைக் கடையை அந்தப் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, புதியதாக ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; அதேபோல, தாய் அங்காடிக்கும் புதியதாக அமைக்கப்படுகின்ற நியாய விலைக் கடைக்கும் இடையில் 1.5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று இங்கே சுட்டிக்காட்டினார். இந்த இரண்டு நிபந்தனைகளுமே அந்தக் கடைக்குப் பொருந்துகின்றன. காரணம், எஸ்.எஸ். புரம் ‘பி’ பிளாக் பகுதியில் கிட்டத்தட்ட 975 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. பயணிக்கின்ற தூரமும் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் உள்ளது. எனவே, புதியதாகக் கடை அமைக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வி ஒன்றைக் கேளுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த இரண்டு நிபந்தனைகளையும் அந்தக் கடை பூர்த்தி செய்கின்ற காரணத்தால், அதைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் சிரமங்களைப் போக்குகின்ற வகையில் புதியதாக நியாய விலைக் கடையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள் அதிகம் விவரமானவர். அனைத்தும் தெரிந்தவர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நியாய விலைக் கடை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். சென்னையில், நியாய விலைக் கடை அமைப்பதற்கு இடம் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. அப்படி கிடைக்கும்பட்சத்தில் வாடகையும் அதிகமாக இருக்கிறது. பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையினுடைய நிதி நிலைமை குறைவாக உள்ளது. அது இதுவரையில்* cumulative loss*–லே இருக்கிறது. இதுபோன்ற காரணங்கள் இருக்கின்றன. நகர்ப்புறங்களில் பொதுவாக 1,000 குடும்ப அட்டைகள் இருக்கலாம் என்று ஏற்கெனவே சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகத்தான் சம்பந்தப்பட்ட இடத்திலுள்ள மக்கள் வசிக்கிறார்கள்.* Thickest Population. *சென்னையைப் பொறுத்தவரையில் 2,000 குடும்ப அட்டைகள் கொண்ட நியாய விலைக் கடைகளும் இருக்கின்றன. எனவே, இதைக் கருத்திற்கொண்டுதான், 2 நகரும் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே முற்பட்டார்கள்.*

முற்பகல் 10–15

அதேமாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் சென்னை போன்ற மாநகரங்களில் நெருக்கமாக இருக்கின்ற பகுதிகளில் ரேசன் கடைக்கு இடம் கொடுப்பதில்லை, இடம் கொடுத்தாலும் அதிகமான வாடகை கேட்கிறார்கள். வாடகையை அந்த சொசைட்டி கட்ட முடியாத நிலை இருக்கின்றது. நிலம் வாங்கலாம் என்று சொன்னால், அந்த நிலத்தினுடைய மதிப்பு அதிகமாக இருக்கிறது. இதுமாதிரி காரணங்களினால் பொதுவாக ரேசன் கடைகளைப் பிரித்துக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. பூங்கா நகரில் மட்டும் ஏறத்தாழ 7 கடைகளில் கிட்டத்தட்ட 2,000 கார்டுகளுக்கு மேல் உள்ளன. 2,400, 2,300 கார்டுகள் உள்ளன. ஆனால் அவற்றிற்கெல்லாம் கடையைப் பிரித்துக் கொடுக்கலாம். ஆனால், பிரித்துக் கொடுக்க முடியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்தபிறகு 47 முழுநேரக் கடைகளை 2011–க்குப் பிறகு இதுவரையிலும் பூங்கா நகரில் பிரித்துக் கொடுத்துள்ளோம்.

[2020 பிப்ரவரி 20

ஒரு பகுதிநேரக் கடையும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக 48 கடைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, திரு. தாயகம் கவி அவர்களிடம் ஒரு சிறிய உதவி, எஸ்.எஸ். புரத்தில் உள்ள மக்கள் அதிக தூரம் வருகிறார்கள் என்று சொன்னால், 101 கார்டுகள் இருக்கின்ற இந்தப் பகுதியினை அந்தப் பக்கம் மாற்றுவதற்கு இடம் பார்த்துக் கொடுப்பீர்களேயானால் துறை ரீதியாக ஆய்வு செய்து, அந்தக் கடையை எங்கு மக்கள் அதிகமாக இருக்கின்றார்களோ, கார்டுகள் அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிக்குக் கொண்டுவர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வைக்கும் கோரிக்கை என்பது திரு.வி.க. நகர் பகுதி மக்கள் நீண்ட தூரம் பயணித்து எழும்பூர் தொகுதிக்குச் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பது. எனவே, அதனைச் சீர்செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் திரு.வி.க. நகர் பகுதியில் கடையைக் கேட்கிறேன். மேலும், அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல கட்டடம் கட்டுவது என்பதும், கட்டடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வது என்பதும் தங்களது அதிகாரத்திற்குட்பட்டது. நீங்கள் விரும்பினால் அந்தக் கடையைக் கட்டுவதற்குரிய இடத்தினை நேரில் சென்று அடையாளம் காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இதுபோன்ற கடைகளை அமைப்பதற்கு இடத்தினை விலைக்கு வாங்க முடியாது. சொசைட்டியில் அந்த அளவிற்கு நிதியாதாரம் கிடையாது. எனவே, அந்த இடத்தை அரசு அல்லது மாநகராட்சி இடமாகக் கண்டறிந்து காண்பித்துக் கொடுத்தீர்களென்றால், கட்டடம் கட்டுவதற்கு துறை ரீதியாக*

2020 பிப்ரவரி 20]

நடவடிக்கை எடுக்கப்படும். இல்லாவிட்டால் மாநகராட்சி கட்டடம் ஏதும் இருந்தாலும், அரசு சமூக நலக் கூடம் இருப்பதாகச் சொன்னாலும் அதில் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுதவிர, நேற்றைக்கு முன்தினம் நான் பதிலினை இங்கே சொல்லியிருக்கிறேன். சில பகுதிகளில் 50 கார்டுகள், 60 கார்டுகள் இருக்கும். 2 கி.மீ., 3 கி.மீ. தூரம் மக்கள் வருகிறார்கள். இதையெல்லாம் கருத்தில்கொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கருணையோடு அவற்றை ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எல்லா உறுப்பினர்களும் கேட்பது நம்முடைய காலத்தில் ஒரு பகுதிநேரக் கடைகூட வாங்கிக்கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், நம்முடைய மக்கள் என்ன நினைப்பார்கள் என்ற ஒரு நிலை இருப்பதை அறிந்து, இதுபோன்ற நிலைகளை துறைரீதியாக ஆய்வு செய்து, ஒரு study செய்து, அதனை நகரும் கடையாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் துறை அலுவலர்களிடம் சொல்லி மூன்று, நான்கு முறை கூட்டம் போட்டுவிட்டேன். சீக்கிரமே அதற்கான விடிவு ஏற்படும். அதுபோன்று வரும்போது, திரு. தாயகம் கவி அவர்களின் கோரிக்கை எந்தெந்தப் பகுதிகளில் அதுபோன்ற கடைகளை நடத்தலாம் என்று நீங்கள் சொன்னீர்கள் என்று சொன்னாலும், நீங்கள் எழுதிக்கொடுத்தீர்கள் என்றாலும், இதுபோல் இந்த இந்த கடைகளுக்கு இவ்வளவு தூரம் செல்கிறார்கள், அவர்கள் வீணாகச் செலவு செய்கிறார்கள், அனைவரும் ஏழை மக்கள், ** மக்களுக்கு இந்த அரசு வழங்கும் பொருட்கள் சென்றடைய வேண்டும். சாதாரண ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 6,500 கோடி ரூபாய் மானியம் கொடுக்கின்றது. எந்த அரசும் இதுவரைக்கும் கொடுத்தது கிடையாது. இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் இல்லாதவகையில், பொருட்களை விலைக்கு வாங்கி விலையில்லாமல் கொடுக்கின்ற ஒரே அரசு அம்மா அவர்களுடைய அரசு. அது தமிழகத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எங்கும் கிடையாது. எனவே, தம்பி அவர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று எழுதிக்கொடுக்கும்பட்சத்தில் உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. நீங்கள் எழுதிக் கொடுக்கும்பட்சத்தில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியில், எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சேவா நகர் பகுதியில் 2 நியாய விலைக் கடைகளும், இந்திரா நகர் பகுதியில் ஒரு கடையும் கட்டி முடிக்கப்பட்டு கட்டட திறப்பு விழாவும் நடந்து முடிந்து, மூன்று மாதங்களாகியும் இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை. தங்களது துறைக்கும், மாநகராட்சிக்கும் இடையே உள்ள நடைமுறை சம்பிரதாயங்களை விரைவுபடுத்தி, சேவா நகர், இந்திரா நகர் கடைகளை விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உறுதியாக, துறைரீதியாக, உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுத்து, கடை திறப்பதற்கான வழிமுறைகளை இந்த அரசு வகுக்கும். எங்கே, எதனால் கொடுக்காமல் இருக்கிறார்கள், ஒப்படைக்காமல் இருக்கிறார்கள் என்று ஆய்வு செய்யப்படும். ஒருவேளை எங்களுடைய* society*–க்கு ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்காமல் இருக்கும்போது இதுபோன்ற தவறுகள் நடந்துவிடுகின்றன. ஒரு இடத்தில் கட்டடம் கட்டிவிடுகிறோம். அதற்கு சான்று வாங்கியிருக்க வேண்டும். தடையில்லாச் சான்று வாங்கி கட்டியிருந்தால் இதுபோன்ற பிரச்சினை இருக்காது. எதனாலோ இந்த மாதிரி குளறுபடி வந்திருக்கிறது. இருந்தாலும், மக்களுடைய பிரச்சினைக்காக இது கட்டப்பட்டிருக்கிறது. எனவே, இதில் இருக்கின்ற தடைகளை நீக்கி, சீக்கிரமாக மாண்புமிகு*

2020 பிப்ரவரி 20]

உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** மக்கள்' என்று சொன்னார்கள். அந்த ** என்பதை—மக்களில் வித்தியாசம் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது வேண்டாம். அதை நீக்கிவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தருமபுரி தொகுதி, தோக்குபொதனஹள்ளி ஊராட்சியில், சீவலக்கன்கோட்டை, துர்க்காளியம்மன் கோயில் தெருவில் புதிதாக நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்று* J.R. *இடத்தில் நான் பலமுறை பரிந்துரை கடிதம் கொடுத்துள்ளேன். அதேபோன்று என்னுடைய தடங்கம் கிராமத்திலிருந்து துவக்கம்பட்டிக்கு ஒரு கடையை பிரித்துத் தர வேண்டுமென்பது குறித்து, கடந்த 2, 3 மாத காலமாகவே அங்குள்ள அதிகாரிகளிடத்தில் தொடர்பு கொண்டபொழுது, எப்பொழுது வேண்டுமானாலும் கடையைத் திறக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், இன்னும் அந்தக் கடையைத் திறப்பதற்குண்டான நிலை இல்லை. உடனடியாக அந்த 3 இடங்களிலேயும் புதிய நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அம்மாவுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும். கடந்த 2011–லிருந்து இதுவரைக்கும் பார்த்தீர்களென்றால்,*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

676 முழுநேரக் கடைகள், 1,748 பகுதிநேரக் கடைகள், ஆக 2,424 கடைகளை இந்த அரசு திறந்திருக்கிறது. இதுதவிர, 46 நகரும் கடைகள், மக்கள் எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும், போக்குவரத்து வசதி இல்லாத பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும், மலைக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம், இந்த அரசு அவர்கள் இல்லத்திற்கு அருகில் போய் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அது, சட்டவிதிகளுக்குட்பட்டு வரும்பட்சத்தில் நிச்சயமாக, உடனடியாக, துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்று எழுதிக் கொடுத்தீர்களேயானால் அரசு உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

புதிய மின்மாற்றி

***34863—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், சித்தாற்காடு கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான செய்யூர் தொகுதியில், சித்தாற்காடு கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, ஆறு, 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியும், இரண்டு,